**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.132/2022

பெயர்- கல்யாணசுந்தரம் (DW2) ( Recall)

த/பெ. /க.பெ.

தேதி -13.03.2026

**<u>மனுவின் பேரில் சாட்சி இன்று மீண்டும் நீதிமன்றம் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

1) 14.06.1961 -தாவா சொத்துக்கான மூல பத்திரம் அசல் ( வாதிகள் தரப்பில் மேற்படி ஆவணம் குறித்து எதிர்வழக்குரையில் எவ்வித விபரம் இல்லை என்ற ஆட்சேபணையுடன் ) பி.வா.சா.ஆ. 11 ஆகவும்,

2) பயிர் காப்பீடு அசல் பி.வா.சா.ஆ. 12 ஆகவும்,

3) பயிர் காப்பீடு அசல்பி.வா.சா.ஆ. 13 ஆகவும்,

4) விவசாய கூட்டுறவு வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் மற்றும் ரசீதுகள் அசல் பி.வா.சா.ஆ.14 ஆகவும்

5) 02.02.2026-ம் தேதியிட்ட வரி ரசீதுகள் பி.வா.சா.ஆ.15 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.

6) கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட 06.11.2025, 13.02.2026, 08.08.2025 தேதிகளிட்ட சிட்டா மற்றும் அடங்கல் தாக்கல் செய்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

பி.வா.சா.ஆ. 11 எந்த சர்வே எண்ணுக்குரியது என்றால் சர்வே எண் ஆவணத்தில் குறிப்பிடபடவில்லை. அதனால் சான்று நகலை வாங்கி தாக்கல் செய்ய உள்ளேன் பி.வா.சா.ஆ. 11 யை தாவா சொத்துக்கு உரிய ஆவணம் என்பதை காட்ட எவ்வித ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 11 வழக்கில் எந்த வித பலனும் கிடைக்க கூடியது அல்ல என்றால்சரியல்ல. பி.வா.சா.ஆ. 12 -2024-2025 ம் ஆண்டுக்கான காப்பீடு என்பதால் வழக்கிற்கு பிந்தைய ஆவணம் அதன் மூலமாக எனக்கு எவ்வித பலனும் கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 13 2025 ம் ஆண்டுக்கான காப்பீடு என்பதால் வழக்கிற்கு பிந்தைய ஆவணம் அதன் மூலமாக எனக்கு எவ்வித பலனும் கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 14 வங்கி கணக்கு புத்தகத்தில் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு வங்கி கணக்கு புத்தகத்தில் சர்வே எண் குறிப்பிடப்படமாட்டாது. 2017 க்கு பின்னர் கணக்கு புத்தகத்தில் குறிப்பு எதுவும் இல்லை என்றால் 2017 வரை

சொசைட்டி இன்சுரன்ஸ் அதன் பின்னர் கம்பெனி இன்சுரன்ஸ் இந்த விபரத்தை எதிர் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 15 ஒரே தேதியிட்ட வரி ரசீதுகள் என்றால் சரிதான். வழக்கிற்கு பிந்தைய ஆவணம் அதன் மூலமாக எனக்கு எவ்வித பலனும் கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா படி தீர்பாக வேண்டும் என்றால் சரியல்ல.